# பஸ்ஸுக்கு தீவைப்பு: 7 பேர் கருகிமாண்டனர்

பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

மலர் 20 மார்கழி 7 முஹறம் 21 இதழ் 309
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 22-12-78

Duplicating
ஆங்கிலத்திலும் தமிழிலும்
Notes, கேள்விப்பத்திரங்கள்,
குறிப்புகள் முதலியன
CYCLO-STYLE செய்யவும்
போட்டோஸ்டாட் பிரதிகளுக்கும்
கப்பகனன்
கொப்பி சேவிஸ்
13, நவீனசந்தை (மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

## 20,000 பேர் கைது

(புதுடில்லி)

திருமதி இந்திரா காந்தி கைது செய்யப்பட்டதற்கு நேற்றும் இந்தியா பூராவும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. பரவலாக நிகழ்ந்த வன்செயல்கள் காரணமாக நேற்று மாலை இருபதினாயிரத்துக்கும் அதிகமானவர்கள் கைதுசெய்யப்பட்டனர்!

தமிழ்நாட்டில், நாகர்கோவிலுக்கு அருகே நேற்றுமுன்தினமிரவு 10-30க்கு பஸ் ஒன்று தீவைக்கப்பட்டதில் ஒரு குழந்தையுட்பட 7பேர் கருகி மாண்டனர். 9 பேர் பலத்த காயங்களுக்குள்ளானார்கள். ஐவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸில் திடீ

(6-ம் பக்கம் பார்க்க)

# 'தமிழர்களைத் தாக்குமாறுகோரி பொலிஸாருக்குக் கடிதங்கள்!'

## காங்கிரஸ் வழக்கு

### தொடர்ந்து தொகுப்புரை

(யாழ்ப்பாணம்)

தமிழ்க் காங்கிரஸ் வழக்கு இன்று பிற்பகல் யாழ். மாவட்ட நீதிபதி திரு. ஜெ. ஜீ. ஆசிர்வாதம் முன்னிலையில் நடைபெறும்.

இன்று நாலாவது எதிர்மனுதாரான சட்டத்தரணி திரு. எம். கே. சுப்பிரமணியம் தொகுப்புரை நிகழ்த்துவார். நேற்று முன்தினம் 2வது எதிர்மனுதரான சட்டத்தரணி ரி. சங்கரப்பிள்ளை தொகுப்புரை நிகழ்த்தினர்.

தமிழ்க்காங்கிரஸ் மாநாட்டைத் தடைசெய்யக் கோரி நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம், வட்டுக்கோட்டை எம். பி, திரு. தா. திருநாவுக்கரசு ஆகியோர் இவ்வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர்.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்), திரு ரி பரமானந்தராசா, திரு. எம் கே. சுப்பிரமணியம் ஆகியோர் இவ்வழக்கில் எதிர்மானுதார்களாவர். (க-அ)

## ஜனாதிபதிக்கு அமிர் புகார்

### யாழ். எஸ். பி.யின் 'ரபர் ஸ்ராம்'புடன் கடிதங்கள் அனுப்பப்பட்டதாம்

(கொழும்பு)

"வடக்குதியில் வாழும் தமிழர்கள் அனைவரையும் தாக்குமாறுகோரி, வடக்கிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் சிங்களத்தில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்திலுள்ள தலைமைப்பொலிஸ்நிலையத்திலிருந்தே இக்கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுபோல இந்தக் கடிதங்களின்கீழ் யாழ். பொலிஸ் அதிபரின் ரப்பர் முத்திரை குத்தப்பட்டுள்ளது. இதுகுறித்து உடனடியாக விசாரணை நடத்தி நடவடிக்கை மேற்கொள்க" என்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று அனுப்பிவைத்துள்ள அவசரக் கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். நகரில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற பொலிஸ் தாக்குதல் மற்றும் வசாவிளான், வல்வெட்டித்துறைச் சம்பவங்கள் தொடர்பாக நேற்றுக் காலை எதிர்க்கட்சித் தலைவர் திரு அமிர்தலிங்கம் ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கினார். இதனைத் தொடர்ந்து இச்சம்பவங்கள் குறித்து விளக்கமாக நேற்றுப்பிற்பகல் ஜனாதிபதிக்கு திரு அமிர்தலிங்கம் அவசரக் கடிதமொன்று அனுப்பிவைத்தார். ஜனாதிபதிக்கு 'அமிர்' அனுப்பிவைத்த கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது;

### தாக்குதல் சம்பவங்கள்

"உங்களுடன் இன்று காலை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியதைத் தொடர்ந்து, இக்கடிதத்தை உங்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

"நேற்று இருபதாம் திகதி புதன்கிழமை இரவு 6 மணிக்கும் எட்டு மணிக்குமிடையே யாழ். நகரில் றீகல் படமாளிகைக்கு முன்பாக சிவில் உடையில் வந்த பொலிசார் அங்கு நின்ற பொதுமக்களைக் காரணமின்றித் தாக்கியுள்ளனர். காயமடைந்த நால்வரில் படுகாயமடைந்த ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### பொலிசாருக்குக் கடிதங்கள்

"வடக்கில் வாழும் தமிழர்கள்மீது தாக்குதல் நடத்துமாறு கோரி வடபகுதியிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் சிங்களத்தில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இக்கடிதங்கள் யாழ்ப்பாணம் தலைமைப பொலிஸ் நிலையத்திலிருந்தே அனுப்பபட்டதாகக் கருதும்படி கடிதங்களின்கீழ் யாழ். பொலிஸ் அதிபரின் றபர் முத்திரை (றபர் ஸ்டாம்ப்) குத்தபபட்டுள்ளது. இவ்விதமான ஒரு செயலுக்காக நான் யாழ். பொலிஸ் அதிபர்மீது சந்தேகம் கொள்ளவில்லை. இவரது பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் யாரோ ஒருவர் யாழ் பொலிஸ் அதிபரின் அலுவலக றபர் முத்திரையை உபயோகித்து இக்கடிதங்களை அனுப்பி வைத்துள்ளனர்

### சாரதிகள் மீது தாக்குதல்

"யாழ்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற சாரதிகள் இராணுவத்தினரால் மாங்குளம், ஓமந்தை, வவனிய ஆகிய இடங்களில் தாக்கப்பட்டுள்ளனர்.

"மயிலிட்டியைச் சேர்ந்த வர்த்தகர் திரு என் சிவஞானரத்தினம் எனக்குத் தெரிவித்துள்ள புகாரில் கொழும்புக்கு மீன் ஏற்றிச்சென்ற

(6-ம் பக்கம் பார்க்க)

## இறுதி ஊர்வலத்தில் பெருந்திரளான மக்கள்

### நகரில் கடைகள் பூட்டப்பட்டன

(யாழ்ப்பாணம்)

நேற்று மாலை அமைதியாக நடைபெற்ற யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோவின் தாயாரது இறுதி ஊர்வலத்தில் வடபகுதியிலுள்ள பல்வேறு திணைக்கள அரச ஊழியர்கள், உயர் அதிகாரிகள், படைத் தலைவர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், பொதுச் சேவைபிரமுகர்கள், சகல மதத் தலைவர்கள், கல்லூரி மாணவர்கள், பெண்கள், பெருந்தொகையான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

அன்னாருக்குத் தமது இறுதி அஞ்சலி செலுத்துமுகமாக யாழ் நகரிலுள்ள வர்த்தக நிலையங்களும் சந்தையும் பிற்பகல் 2 மணிக்கு மூடப்பட்டன. நகர் எங்கும் வெள்ளை, கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன டக்ஸிகளில் வெள்ளைக்கொடிகள் கட்டப்பட்டு இறுதி ஊர்வலத்தில் அணிவகுத்து வந்தன.

கூட்டணித் தலைவர்களில் சாவகச்சேரி எம் பி. திரு. வ. ந நவரத்தினம், வட்டுக்கோட்டை எம் பி திரு அ. திருநாவுக்கரசு, கோப்பாய் எம் பி திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை உட்பட திருமதி யோகேஸ்வரனும் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்கள். பெருந்தொகையான மலர்வலயங்களும் அனுப்பிவைக்கப்பட்டன.

பிற்பகல் 4-30 மணியளவில் குருநகர் கொஞ்சேஞ்சி சேமக்காலைக்கு அருகில் அமைக்கப்பட்ட விசேட சிதையில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. சிதைக்கு தீமூட்டும்போது அன்னாரின் சகல பிள்ளைகளும் நேரில் பிரசன்னமாய் இருந்தனர். (ெக)

### யாழ். மாநகரசபை 'பட்ஜெட்'

## மரக்கறி மார்க்கட் அமைக்க மூன்றரை லட்சம் ஒதுக்கீடு

### பழக்கடையைத் திருத்த ஒரு லட்சம்

(யாழ்ப்பாணம்)

யாழ் முனீஸ்வரன் வீதியில் உள்ள தனியார் நிலத்தைச் சுவீகரித்து திறந்தவெளி மரக்கறி மார்க்கெட் ஒன்று அமைப்பதற்கு யாழ் மாநகர சபையின் 79ம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் மூன்றரை லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது பழைய கட்டடத்திலுள்ள மரக்கறி, பழக்கடை மார்க்கட்டை நவீன முறையில் திருத்தி அமைப்பதற்கும். கண்ணாடிக்கடை, மட்பாண்டக்கடைகளைத் திருத்தியமைப்பதற்கும் ஒரு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

### வடிகால்கள் அமைக்கப்படும்

யாழ் நகரத்தில் மழைநீர் தேங்கிநிற்காதவாறு நவீன

(6-ம் பக்கம் பார்க்க)

## பின்னுறுதிக் கட்டளை

மல்லாகம் மாவட்ட
நீதிமன்றத்தில்
சுழிபுரம் என்னும் இடத்தைச் சேர்ந்த கணபதியார் கந்தையா பெண் பொன்னு என்பவரின் மரணசாதனத்தின் சொத்தின் விடயத்தில்
மரணமெய்தியவர்
வழ. இல. T/6
சுழிபுரம் மு. கதிரவேலு நடராசா
மனுதார்
எதிராக
1. கதிரவேலு கைம்பெண் சிதம்பரம்.
2. சுப்பிரமணியம் கைம்பெண் தங்கமுத்து இருவரும் சுழிபுரம்.
எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்தவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்கு மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1978-ம் ஆண்டு ஆடி மாதம் 28-ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணமிருப்பின் காட்டுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றனர்.

1978-ம் ஆண்டு ஆனி மாதம் 6-ந் திகதி.
என்னால் வரையப்பட்டது
ஒப்பம்
தா. சங்கரப்பிள்ளை,
மனுதாரின் சட்டத்தரணி.
மன்றின் ஆணைப்படி
ஒப்பம்
ஆர். ஜெகராசசிங்கம்,
பதிவாளர்.

25-7-78
காரணம் காட்டும் திகதி 1-9-78 வரைக்கும் நீடிக்கப்பட்டுள்ளது.
ஒப்பம்
ஆர். ஜெகராசசிங்கம்,
பதிவாளர்.

1-9-78
காரணம் காட்டும் திகதி 22-12-78 வரைக்கும் நீடிக்கப்பட்டுள்ளது.
ஆர். ஜெகராசசிங்கம்,
1111 பதிவாளர்.

## இலக்கியத் துறையில் இளைய தலைமுறை

காவலூர்
எஸ். ஜெகநாதன்
எழுதும்
தொடர் கட்டுரை

இலக்கியத்துறையில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வரும் இளைய தலைமுறையினரைச் சந்தித்தும் அவர்களின் ஆக்கங்களை நோக்கியும் எழுதப்படும் சுவையான அறிமுகத் தொடர் விரைவில் வார மலரில் ஆரம்பமாகும்.

## முதலிலே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட
நீதிமன்றம்
தெல்லிப்பழை மாவிட்டபுரம் காலஞ்சென்ற சின்னத்தம்பி கந்தப்பிள்ளையின் மரணசாதனம் பற்றிய விடையம்.
காலஞ்சென்றவர்.
வழக்கு இலக்கம்)
தத்துவம்) T 26
கந்தப்பிள்ளை கைம்பெண் கனகம்மா 'குமரகோட்டம்' மாவிட்டபுரம் தெல்லிப்பழை.
மனுதார்

மேற்படி வழக்கில் மேலே பெயர் குறிக்கப்பட்டவரான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1978ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31ந் திகதி அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.
நீதிமன்றக் கட்டளைப்படி

றிச்சேட்ஸ். ஜெயராசசிங்கம்,
பதிவாளர்.
1978ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31ம் நாளன்று திகதியிடப்பட்டது.
வரைவு.
V. S. கணேசலிங்கம்
மனுதாரின் சட்டத்தரணி
1123

## அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட
நீதிமன்றத்தில்
யாழ்ப்பாணம் திருநெல்வேலி தெற்கு இல. 1096, பலாலி ரோட்டு தாமோதரம்பிள்ளை வல்லிபுரம்பிள்ளை பெண் சுகிலாதேவியின் மரணசாதனமில்லாச் சொத்துவிடயத்தில்-
-மரணமெய்தியவர்.
தாமோதரம்பிள்ளை
வல்லிபுரம்பிள்ளை,
இல. 1096, பலாலி ரோட்டு, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.
மனுதார்.
மரணசாதன
நியாயாதிக்கம்: இல. 3414.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணசாதனச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்கறையுள்ள ஆள்எவரும் 1979ம் ஆண்டு மாசி மாதம் 9ம் திகதியன்று முற்பகல் 10 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு, இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றனர்.
நீதிமன்றக்கட்டளைப்படி

(ஒப்பம்)
பொ. பாக்கியநாதன்
பதிவாளர்.

வரைவு
இ. சிவசுப்பிரமணியம்
மனுதார் சட்டத்தரணி.
1118

## அறிவித்தல்
### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் திருநெல்வேலி தெற்கு இல. 1096, பலாலிரோட்டு, வல்லிபுரம் தாமோதரம்பிள்ளையின் மரணசாதனமில்லாச் சொத்து விடயத்தில்......
மரணமெய்தியவர்

தாமோதரம்பிள்ளை வல்லிபுரம்பிள்ளை; இல. 1096, பலாலி ரோட்டு, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.
மனுதார்
மரணசாதன
நியாயாதிக்கம் இல. 3413.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணசாதனச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1979 ம ஆண்டு, மாசி மாதம், 9 ம் திகதியன்று முற்பகல் 10 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.
நீதிமன்றக் கட்டளைப்படி

(ஒப்பம்)
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.
வரைவு
இ. சிவசுப்பிரமணியம்,
மனுதார் சட்டத்தரணி.
1117

## 200 ரூபா நஷ்டஈடு

[பண்டத்தரிப்பு]

காதைக்கடித்து பிடுங்கியதாகக்குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் முறைப்பாட்டுக்காரருக்கு நஷ்டஈடாக 200 ரூபா பணம் கொடுக்குமாறு எதிரிக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

பனிப்புலத்தைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் என்பவரை தாக்கி அவரின் காதைக் கடித்து பிடுங்கியதாக சங்கானைப் பொலிசாரினால் அதே இடத்தைச் சேர்ந்த இராசகோபால் என்பவர் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டவழக்கு சங்கானை சுற்று நீதிமன்றத்தில் பதில் நீதிபதி திரு. தம்பிரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரியைக் குற்றவாளியாக கண்டநீதிபதி முறைப்பாட்டுக்காரருக்கு நஷ்டஈடாக 200 ரூபா கொடுக்குமாறு உத்தரவிட்டு தீர்ப்பு வழங்கினுர்.

வாதிதரப்பில் சட்டத்தரணி திரு. சோ. தேவராஜாவும் எதிரி தரப்பில் சட்டத்தரணி திரு. மு. திருநாவுக்கரசுவும் ஆஜரானுர்கள். (அ)


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

இராசவீதி கோப்பாயில் ஏழுபரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. பழனித்துரை, பொற்பதி ரோட் கொக்குவில்.
1086

நல்ல நிலைமையில் 6ஸ்ரீ இந்தியன் Lambretta Scooter விற்பனைக்குள்ளது. மு. நவராஜசிங்கம், இணுவில் வீதி ஆஸ்பத்திரிக்கு அருகாமையில். மானிப்பாய். 1127


சூருவளி நிவாரண நிதி

# உதைபந்தாட்டம்
## இன்று அரைஇறுதிப்போட்டி

[யாழ்ப்பாணம்]

சூருவளி மறுவாழ்வு நிதிக்காக துரையப்பா விளையாட்டரங்கில் யாழ். விசேட ஆணையாளரின் வெற்றிக் கிண்ணத்துக்காக இடம்பெற்றுவரும் 'நொக் அவுட்' உதைபந்தாட்டப்போட்டியின் அரைஇறுதிப் போட்டிகள் இன்றும் இறுதிப் போட்டி நாளையும் நடைபெறுகிறது.

அரையிறுதிப்போட்டிகளின் போதுமுதலாட்டத்தில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி கோஷ்டி யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியுடன்மோதும். இரண்டாவது போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியுடன் மோதவிருப்பது யாழ்இந்துவா அல்லது சம்பத்தரிசியார் கல்லூரியாவென்பது இன்னமும் நிச்சயமற்றதாகவேயுள்ளது.

காரணம் யாழ். இந்துக் கல்லூரிக்கும் சம்பத்தரிசியார் கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற போட்டி பார்வையாளர்களுக்கு ஆட்ட ஆரம்பம் முதல் இறுதிவரை பெரும் விறுவிறுப்பை ஏற்படுத்தியிருந்தபொழுதிலும் எந்தக் கோஷ்டியும் ஒரு கோல்தானும் போடாதநிலையில் இறுதிவரை சமமாகவிருந்தமையே.

சம்பந்தப்பட்ட போட்டியை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு அளிக்கப்பட்ட ஆட்டத்தின் நேர நீடிப்புப் பயனளிக்கத்தவறிவிட்டது.

சம்பத்தரிசியார் யாழ் இந்து கோஷ்டிகளில் எந்தக்கோஷ்டியும் ஒருகோல்தானும் சம்பாதிக்காத சமநிலையில் இருள் காரணமாக அன்று தொடர முடியாதுபோன சமத்துவ நிலையைத் தவிர்க்கும் பெனுல்டிக் உதைகள் அரைஇறுதிப் போட்டியன்றே இடம்பெறவுள்ளன.

நாளை நடைபெறும் இறுதிப் போட்டியில் முதலாம் இரண்டாம் ஸ்தானங்களைத் தட்டிக்கொள்ளும் கோஷ்டிகளுக்கு வெற்றிக்கிண்ணங்களும் ஆறும் ஸ்தானத்தைப்பெறும் கோஷ்டிக்கு ஒரு உதைபந்தும் வழங்கப்படவுள்ளது. மூன்ருவது ஸ்தானத்தை நிர்ணயிப்பதற்காக அரைஇறுதி ஆட்டத்தில்வெற்றிக்கானவாய்ப்பைத் தவறவிட்ட கோஷ்டிகள் இரண்டும் சந்திக்கவிருக்கின்றன இறுதிபோட்டி இடம்பெறும் தினத்தில் சம்பந்தபபட்ட ஆட்டமும் இடம்பெறும்.

## மரம்நாட்டு விழாக்களில் ரமேஷ்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் சேகரிக்கப்பட்ட பனம் விதைகளை யாழ்ப்பாணம் மில்வைற் தொழிலக அதிபர் திரு. எஸ். கனகராஜா, ஒலுமடு, கருப்பட்டமுறிப்பு, கற்சிலைமடு, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, பரந்தன், கிளிநொச்சி, வவுனிக்குளம், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் உள்ள குடியிருப்பாளர்களுக்கு அண்மையில் வழங்கினுர்.

அண்மைக்காலங்களில் திரு கனகராஜா பல இடங்களிலும், மரம் நாட்டு விழாக்களை நடாத்தியதுடன், பல குளங்களையும் ஆழமாக்கும் பணியினையும் நிறைவேற்றியுள்ளார்.

இவ்வைபவங்களில், பனையின் பயன்பற்றியும், மரங்களை நாட்டுவதால் ஏற்படும் பயன் குறித்தும் இனிய பாடல்களை திரு. ரமேஷ் வைகுந்த நாதன் பாடினுர்.

யாழ். இந்திக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற சாரணர் விழாவிலும் திரு ரமேஷ் வைகுந்தநாதனின் பாடல் இடம்பெற்றது. (கெ)


## மீனவர் தேவை

நவாலி Y. M. C. A. யின் 28 அடி நீளமுள்ள வள்ளத்திற்கு ஆழ் கடல் மீன்பிடி அனுபவமுள்ள மீனவர்தேவை. விரும்புபவர்கள் தலைவரிடம் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்.
1128 நவாலி Y.M.C.A. மானிப்பாய்.

## கிறிஸ்மஸ் பண்டிகையை குதூகலமாகக் கொண்டாடுங்கள்

வாடிக்கையாளர்கள் நன்மை கருதி
எமது நிறுவனம்
சனி, ஞாயிறு முழுநாளும்
திறந்திருக்கும்

உங்கள் தேவை எதுவானுலும்
கவலை வேண்டாம்...

★ விளையாட்டுச் சாமான்கள் ★ பாலுணவுகள்
★ கேக் சாமான்கள் ★ பல்கன் டின்பால்
★ அலங்கார ஜோடனைகள் ★ வெளிநாட்டு பிஸ்கட்... இன்னும் பல

வட பகுதி இறக்குமதியாளர்
முகமதலி அப்துலலி
5-7, பெரியகடை - யாழ்ப்பாணம்
போன்: 515.

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## மரண அறிவித்தல்
### திருமதி. பொன்னம்மா கந்தையா

திருமதி. பொன்னம்மா கந்தையா காலமானுர். இவர் காலஞ்சென்ற கந்தையாவின் மனைவியும், பலேசியாவைச் சார்ந்த ரத்தினம் சபாரத்தினம், கனகரத்தினம் புலேந்திரன் ஆகியோரின் தாயாரும், உதவி அரசாங்க அதிபர் தர்மபாலனின் மனைவி சரோஜினியின் பேத்தியாருமாவர். அன்னரின் பூதவுடல் 22-12-78 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு 284 பருத்தித்துறை வீதி, நல்லூர் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
1126

# பாராளுமன்றத்தில் நடைபெற்ற 'புலிப்போர்'

## ஆளும் கட்சி -- கூட்டணி சர்ச்சை

கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின்மீது நேற்று முன்தினம் நடைபெற்றுக் கொண்டிருந்த விவாதம், அதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நேரத்தைவிட முன்னதாகவே முடிவடைந்தது.

பொதுவாக, சபையில் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் அமைச்சுக்களின் மானியம் மீதான குழுநிலை விவாதத்தின்போது மாலையில் மிகக்குறைந்த உறுப்பினர்களே சபையில் காணப்படுவர்.

அரசாங்க தரப்பிலும்கூட சில வேளைகளில் சம்பந்தப்பட்ட அமைச்சரும் பிரதியமைச்சரும் மட்டுமே காணப்படுவார்கள்.

எனினும் அதேவேளை, விவாதங்கள் பொதுவாக, ஒதுக்கப்பட்ட நேரம்வரையிலோ, அல்லது அதற்கும்திகமானநேரம் வரையிலோ, நடைபெற்றுக் கொண்டேயிருந்தன.

ஆனால், நேற்று முன்தினம் முழுநாளுமே - இரவு 8 மணிவரை கைத்தொழில்விஞ்ஞான அலுவல்கள் அமைச்சுக்கு ஒதுக்கியிருந்தபோதும் மாலை 6-45 மணியளவிலேயே விவாதமும் முடிவடைந்தது. சபையில் கணிசமான அளவு உறுப்பினர்களும் காணப்பட்டனர். கலரிகளும் நிறைந்திருந்தன.

சபை ஒத்திவைப்புப் பிரேரணையின்போது எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் யாழ்ப்பாணப் பகுதியின் பல இடங்களில்கடந்த சிலநாட்களாக இராணுவத்தினரும் பொலிசாரும் அப்பாவி மக்களைத் தாக்கியும் கடைகளையும் வீடுகளையும் சேதப்படுத்தியும் வருவதாகவும் மக்கள் இதனுல் பீதியடைந்திருப்பதாகவும் கூறி, கடந்த 5-ந் தேதியிலிருந்து திங்கள் இரவுவரை யாழ்ப்பாணப்பகுதியில் நடைபெற்ற சில சம்பவங்கள் பற்றி தமக்குக்கிடைத்த தகவல்களை விளக்கிக்கூறினுர்.

அமைதியாகவே திரு. அமிர்தலிங்கம் இச்சம்பவங்களைப் பற்றிப் பிரஸ்தாபித்துக் கொண்டிருந்தபோது பின்வரிசையிலிருந்து இடையிடையே சில குரல்கள்எழுந்தபோதும் அவற்றைப் பொருட்படுத்தாது தொடர்ந்தார் அவர்.

எனினும் பின்னர் சபை பின்வரிசைகளிலிருந்து கூச்சல்கள் அதிகமாகின. அப்போது, "பின்வரிசை உறுப்பினர்களுக்கு மனிதாபிமானம் புரியவேண்டும்" என்றுர் திரு. அமிர்தலிங்கம்.

### 'புலிகள்' குரலும் அமிர் வேண்கோளும்

'புலிகள்' என்று சில குரல்கள் ஒலிக்கவும் — "புலிகளோ சிங்கங்களோ சட்டத்துக்கமைய எவர்மீதும் நடவடிக்கை எடுங்கள் என்றவர், அப்பாவி மக்களைத் துன்புறுத்திப் பீதியை ஏற்படுத்தவேண்டாமென்றும் பொதுப்பிரஜை ஒருவரை நியமித்து, அவர் மூலமாக இச்சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தும்படியும் அடையாள அணிவகுப்பொன்றை நடத்தும்படியும் பிரதமரையும் அரசாங்கத்தையும் தாம் கோருவதாகத் தெரிவித்த அவர், முன்னைய ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற நடவடிக்கைகள் குறித்துக் கமிஷன் விசாரணை நடத்தும் இந்த அரசின் நடத்தை பற்றி அடுத்துவரும் அரசாங்கமும் கமிஷன் விசாரணை ஒன்றை நடத்தவேண்டிய ஒரு நிலையைப் பிரதமரும் ஜனுதிபதியும் விரும்பமாட்டார்கள் என்றே தாம் நம்புவதாகவும் தெரிவித்து அமர்ந்தார்.

"இந்தக் கேள்விக்கான முன்னறிவித்தலை முதல் நாளே நான் கொடுத்திருந்தபோதுங்கூட சபையில் பிரதமரோ - பிரதியமைச்சரோ இல்லை; எனினும் அவர்கள் இங்கு வந்து பதிலை அளிப்பார்களென்றே நாம் நம்புகிறோம்" என்று திரு. அமிர்தலிங்கம் தமது வினவை ஆரம்பித்த சமயமே பிரதமர் சபையினுள் பிரவேசித்தார்.

### அமளிபற்றிப் பேசி அமளி ஏற்படுத்தினுர்

யாழ்ப்பாணத்தில் பொலிஸ் இராணுவத்தினர் அமளியை ஏற்படுத்துவதாகத் தெரிவித்து திரு. அமிர்தலிங்கம் எழுப்பிய இக்கேள்வி, சபையில் பெரும் அமளியை ஏற்படுத்தி அரசாங்க உறுப்பினர்களுக்கும் கூட்டணி உறுப்பினர்களுக்குமிடையே மிகக் கடுமையான வாக்குவாதங்களையும் ஏற்படுத்தி, கடைசியில் பிரதான எதிர்க்கட்சியினரான தமிழர் விடுதலைக் கூட்டணியினர் சபையைவிட்டு வெளியேறும் நிலையையும் ஏற்படுத்தியது.

எதிர்க்கட்சித் தலைவர் அமர்ந்ததும் மாவத்தகம உறுப்பினர் திரு. பிரேமச்சந்திர, இவ்வினு தொடர்பாகப் பேச எழுந்த போது சபாநாயகர் ஜனுப் பாக்கீர் மாக்கார் இது கிறுர்கள் என்றும் அவர் ஆவேசமாகவே சபையில் பேசினுர்.

### யோகேஸ் ஆத்திரம்

அவரையடுத்து எழுந்த யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் என்றுமே இல்லாதவாறு ஆவேசத்துடனும் ஆத்திரத்துடனும் சபையில் உரையாற்றினுர்.

குற்றம்சாட்டப்பட்ட ஒருவர் இச்சபைக்கு வரக்கூடாதா? அப்படியானுல் இக்கேள்வியை எழுப்பிய மாவத்தகம உறுப்பினர் யார்? கொலைக்குற்றம் சாட்டப்பட்டு அவர் சிறையில் வைக்கப்படவில்லையா?

பிரதிஅமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேராமீது குற்றம் சுமத்தப்படவில்லையா? அவர்பிரதி அமைச்சராகவில்லையா? நிவித்திகல எம். பி. குற்றம் சாட்டப்படவில்லையா? இவர்களை எமது சகாக்களாக நாம் ஏற்றுக்கொள்ளவில்லையா? அப்படி

நமது நிருபர் மாலி

ஒரு விவாதமல்ல என்றுகூறி அனுமதி மறுக்கவும் கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு, சிறில் மத்தியூ அதனை ஆட்சேபித்து உறுப்பினர்கள் தமது கருத்தைத் தெரிவிக்கலாம் என்றும் இதில் விவாதிக்க முடியும் என்றும் அதுவே மரபு என்றும் குறிப்பிட்டார்.

இவ்வினு பிரதமரிடமே கேட்கப்பட்டது எனச் சபாநாயகர் கூற. பிரதமர் திரு. பிரேமதாச எழுந்து 'எனது பதிலை அடுத்து உறுப்பினர்கள் தமது கருத்தைத் தெரிவிக்கலாம்' என்றுதானே நீங்கள் கூறுகிறீர்கள்" என்று சபாநாயகரைப் பார்த்துக் கூற சபாநாயகரும் "ஆம்" என்றுர்.

அதன்பின்னர் உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராஜலிங்கமும் யாழ். நகரச் சம்பவங்கள் பற்றிப் பிரஸ்தாபித்தார்.

'எதிர்க்கட்சித் தலைவர் கூறிய விஷயத்தைத்தான் நீங்களும் கூறுகிறீர்களா' என சபாநாயகர் கேட்க, 'ஒரே விஷயமானுலும் உறுப்பினர் அதுபற்றிப் பேசலாம்' என சபாநாயகருக்கு ஆலோசனை வழங்கினுர் பிரதமர்.

### ராஜலிங்கத்துக்கு மாவத்தகம எம். பி. பதில்

ராஜலிங்கத்தையடுத்து எழுந்த மாவத்தகம எம். பி. எதிர்க்கட்சித் தலைவர் கூறிய விஷயங்கள் அங்கு நடைபெற என்ன காரணம் என்பதைச் சிந்திக்க வேண்டும் என்றுர்.

நடைபெற்ற கொலைகள் கொள்ளைகள் பற்றிய விபரம் அனைத்துமே மர்மமாக இருப்பதாகவும் 11 பொலிசார் கொலை செய்யப்பட்டிருப்பதாகவும் கூறிய அவர், அங்கு பயங்கரவாதம் நிலவுவதாகவும் கூறினுர்.

இன்னுெரு விஷயத்தையும் திரு பிரேமச்சந்திர சபையில் கிளப்பினுர்.

### பயங்கர சக்திகளுடன் கூட்டணியாம்

துரையப்பா கொலைவழக்கில் கொலைகாரர் எனச்சந்தேகிக்கப்பட்ட ஒருவரை மானிப்பாய் எம். பி. சில தினங்களின் முன் இச்சபைக்கு அழைத்து வந்தார் என்பதே அந்த விஷயம்.

ஆறுமுகம் கிருபாகரன் என்ற இளைஞர் பின்னர் ஓடிவிட்டார் இத்தகைய பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுவோருடனேயே தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பழகுகிறார்கள் ...

இருக்க குற்றம் எதுவுமே நிரூபிக்கப்படாத கிருபாகரனை இச்சபைக்கு அழைத்துவந்தால் அதில் என்ன தவறு என்று மிகுந்த உணர்ச்சியோடு கேட்ட யோகேஸ்வரன் 34 வங்கிகள் ஏனைய இடங்களில் கொள்ளையடிக்கப்பட்டன. எவையாவது மூடப்பட்டனவா? வேறு இடங்களில் நடைபெறவில்லையா எனக்கேட்டவர் எங்கள் மக்களை உங்களால் வெல்ல முடியாது அமைதியை ஏற்படுத்த உங்களால் முடியாவிட்டால் வடக்கு கிழக்கு மாகாணத்தை விட்டு வெளியேறுங்கள் என்று மிகுந்த உணர்ச்சியோடு கூறிவிட்டு அமர்ந்தார் யோகேஸ் கூட்டணி எம்பிக்கள் கரகோஷமிட்டார்கள்.

### புலிகளின்தலைவர் கூட்டணித்தலைவர்

தங்காலை உறுப்பினர் திரு. வில்சன் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் புலிஇயக்கத்துக்கும் தலைவர் ஒருவரே என்றும் எதிர்க்கட்சித்தலைவர் ஒரு கோடி 40 லட்சம் மக்களின் சார்பிலும் பேசவேண்டும் இல்லாவிட்டால் அவர் அப்பதவியிலிருந்தும் வெளியேற வேண்டும் என்றும் பல தகரகோஷத்தினிடையே கூறினுர்.

புலிகளுக்கு கூட்டணியினர் வேலை பெற்றுக்கொடுப்பதாகவும் அவர் குற்றம் சுமத்தினுர்.

### குறுக்கீடுகளுக்கிடையில் சிவா

இவரையடுத்து கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் பலத்த குறுக்கீடுகளுக்கும் கூச்சல்களுக்குமிடையே மிக உக்கிரத்தோடு பேசினுர்

அப்பாவிப் பிரஜைகளைத் தாக்கும் நடவடிக்கையை நீங்கள் ஆதரிக்கிறீர்களா என்ற உண்மையை வெளிப்படுத்தியதற்கு நன்றி என்று தமது பேச்சை ஆரம்பித்த திரு சிவசிதம்பரம் 'நீங்கள் சத்தமுள்ள உண்மையைக் கேளுங்கள்" என்றுர்.

கிருபாகரன் இச்சபையிலிருந்து எங்கும் ஓடவில்லை தன்னைப் பொலிசார் துன்புறுத்தியதாக அவர் எமது தலைவரிடமே சென்று முறையிட்டார்' என்றுர் அவர்.

பொலனறுவை மாவட்டத்தில் அத்தனை வங்கிகளுமே கொள்ளையடிக்கப்பட்டன என்று சொன்ன அவர் செரூடீஷியா, தென்னை பிரிக்கரவில் நடப்பதைப் போன்று நீங்களும் செயல்படப் போகிறீர்கள் என்றபோது உணவு

[6ம் பக்கம் பார்க்க]

# சைவமும் அவதாரக் கொள்கையும்

பண்ணிசைக் கலாநிதி எஸ். கே. சிவபாலன்

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டொழுகும் சைவத்தில் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் சிவனே பிரமாவாக படைத்தல் தொழிலையும், விஷ்ணுவாக காத்தல் தொழிலையும், உருத்திரமூர்த்தியாக அழித்தல் தொழிலையும் இயற்றியருளுகின்றுர். இதை மணிவாசகர் "படைத்தளித்தழிப்பமும்மூர்த்திகளாயினை" எனப்பகருவதிலிருந்து அறியக்காணலாம். இம்முத்தொழில்மூலமே இங்கு திருவவதாரக் கொள்கை நிலை நிறுத்தப்படுகின்றது எனலாம் சிவபிரானின் திரு அவதாரமாகத் தோன்றியவர் தட்சணுமூர்த்தியாவர். சைவதத்துவத்தில் சிவனே முழுமுதற் கடவுளாக இருந்தும் பரம்பொருளின் வேறுபட்ட தோற்றங்களாகவே சிவன், பிரமா, விஷ்ணு, சக்தி போன்ற நிலைகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன, வைஷ்ணவப் பிரிவு பிற்காலத்தே ஏற்பட்ட ஓர் பிரிவாகும். சிந்து வெளிக்கால சைவத்தை ஆராயும்பொழுது அக்காலத்தே சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமய நெறியில் முதற் சைவநெறியாக வைஷ்ணவம் உட்பட ஒன்ருகவே வளர்ந்துவந்திருக்கின்றது.

### பூவுலகில் இறைவன்

இறைவனின் அவதாரங்கள் எல்லாம் மனிதனின் முன்னேற்றத்திற்காகவே தோற்றுவிக்கப்பட்டதாகும். ஒவ்வோர் அவதாரத்தினதும் குறிக்கோள் பேராபத்தினின்றும் உலகைக் காப்பாற்றுதல், தீயோரை அழித்தல், நல்லோரைப் பேணுதல் என்பனவாகும். இதற்குச் சான்றாக கிருஷ்ணன் பகவத்கீதையில் "அதாமம் தலை தூக்கும்பொழுது நானே தோன்றுகின்றேன். நல்லோரைப் பேணவும், பாவிகளை அழித்தொழிக்கவும், உலகில் உண்மையை நிலைநாட்டவும் நான் அவ்வப்போது வந்து பிறக்கிறேன் என்று கூறுகின்றுர். எனவே உலகில் நன்னெறி தேய்ந்து தீநெறி எப்பொழுது மேலோங்குகின்றதோ, அசுர சக்தி எப்பொழுது தெய்விக ஆற்றலை வெல்ல முற்படுகின்றதோ இறைவனது மறைமொழிகளும், அவர் தூதுவரது கட்டளைகளும் எப்பொழுது மறக்கப்படுகின்றனவோ, அன்றேல் புறக்கணிக்கப்படுகின்றனவோ அப்பொழுதே நன்மையை நிலைநாட்டவும் மனிதனைப் பாதுகாக்கவும் இறைவன் பூவுலகில் அவதரிக்கின்றுர் இறைவன் பெளதிக சம தளத்திற்கு இறங்கிவரும்பொழுது மானிட உருவம் தாங்குகின்றுன் இந்த நிலையிலேயே அவதார புருஷன் எனவும் அழைக்கப்படுகின்றுன்.

வெள்ளிவிருந்து

### பூரண அவதார புருஷர் கிருஷ்ணபகவான்

அவதார புருஷர்கள் மேலான அப்பரம்பொருளோடு ஒன்றுபட்டவர்கள் இவர்கள் இறைவனின் ஒளிக்கிரணங்கள் என்றும் கூறலாம். இவர்கள் உலகைக் காக்கும் தொழில் முடிந்ததும் பூவுலகை விட்டு மறைந்துவிடுவர் பூரண அவதார புருஷராக விளங்கியவர் கிருஷ்ணபகவானாகும். கிருஷ்ணரும், இராமபிரானும் விஷ்ணுமூர்த்தியின் திருவவதாரங்களேயாகும். விஷ்ணுமூர்த்தியின் பத்து அவதாரங்களாவன முறையே மச்ச, கூர்ம, வராக, நரசிங்க, வாமன, பரசுராம இராம, கிருஷ்ண, புத்த, கல்கி அவதாரங்களாகும் இவ்வவதா

(4ம் பக்கம் பார்க்க)

## இன்று

# தூய அன்னையின் 126-வது பிறந்ததின திதி பூசை

இன்று அன்னை சாரதா தேவி அவதரித்த நன்னுள் அவர் அவதரித்த நாளாம் டிசம்பர் 22-ந் திகதியே அன்னையாரின் பிறந்த தின திதியாக இவ்வருடம் வருவது மிகவும் சிறப்பானதாகும் உலகெங்கிலும் உள்ள இராமகிருஷ்ண மிஷன்களில் இத்திதிபூசை வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. அன்னையாரின் சென்றவருட பிறந்த தின திதிபூசை இவ்வருடத்தில் ஜனவரி முதலம் திகதியும் இவ்வருடத்திற்குரிய திதி பூசை இம்மாதம் 22-ம் திகதியும் ஆக இவ்வருடத்தில் இரண்டு பிறந்த தினதிதி பூசைகள் வருவது இவ்வருடத்திற்கு உயர்ந்த மகத்துவத்தைக் கொடுக்கின்றது இப்புனித நன்னுளில் அன்னையாரை நினைவு கூர்ந்து பெரும் பேறு பெறுவோம.

### கொக்குவிலில்

ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமம் [இலங்கை] தமது செயலகமான கொக்குவில் செம்பியன் ஒழுங்கை 20 இலக்க இல்லத்தில்பஜனைசொற்பொழிவுடன் அமைதியாக இத்தினத்தைக் கொண்டாடுகின்றது.

--அடியான்

## வாரணாசியில் இந்திய கடத்தல் விமானம்

# இந்திராவை விடுதலை செய்யக் கோரிக்கை; பேச்சுநடத்த பிரதமருக்கு அழைப்பு

## ஆயுதம் தாங்கிய இருஇளைஞர்கள் அட்டகாசம்

புதுடில்லி, டிச. 21

**திருமதி இந்திராகாந்தியை நிபந்தனையின்றி விடுதலைசெய்யுமாறு கோரி இந்திய விமானம் ஒன்றைக் கடத்தல் காரர்கள் வாரணாசி விமானநிலையத்தில் இறக்கியுள்ளனர்.**

கல்கத்தாவிலிருந்து 126 பயணிகளுடனும் 6 விமானச் சிப்பந்திகளுடனும் புதுடில்லி வந்த இந்த விமானம் கடத்தப்பட்டது.

**பணயம்**

பயணிகளில் 35 பேர் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் 131 பேரும் இரண்டு கடத்தல்காரர்களால் தொடர்ந்தும் பணயக் கைதிகளாக விமானத்தில் வைக்கப்பட்டுள்ளனர்,

**இரு இளைஞர்கள்**

விமானத்தைக் கடத்திய இரு இளைஞர்களும் கைக்குண்டுகளும் துப்பாக்கிகளும் வைத்திருக்கின்றனர் என்றும் திருமதி காந்தியை விடுதலை செய்யாவிடின் விமானத்தைத் தகர்க்கப்போவதாக தெரிவித்துள்ளனர் என்றும் விமானத்திலிருந்து பின்கதவு வழியாக தப்பிவந்த பிரயாணி ஒருவர் தெரிவித்தார்

**பேச்சுவார்த்தைக்கு விமானத்திற்கு அழைப்பு**

இந்திராவை விடுதலைசெய்வது குறித்து பிரதமர் திரு. மொரார்ஜிதேசாயும் உத்தரப் பிரதேச முதல்வர் திரு. ராம் நரேஷ்யாதவும்தம்முடன் பேச்சு நடத்த வேண்டும் என்றும் பேச்சு நடத்த அவர்கள் விமானத்திற்கு வரவேண்டும் என்றும் கடத்தல்காரர்கள் 'வயலர்ஸ்' மூலம் அறிவித்துள்ளனர்.

திரு. யாதவ் பேச்சுநடத்துவதற்காக வாரணாசி விமான நிலையம் சென்றுள்ளபோதிலும் விமானத்திற்குள்செல்ல மறுத்துவிட்டார். கடத்தல் காரர்களும் வெளியேவர மறுத்துவிட்டனர்.

**ஜோர்ஜ் பெர்னண்டஸ் கருத்து**

இதே வேளையில் எது எவ்வாறிருப்பினும் விமானக் கடத்தல் காரர்களுடன் அரசு சமரசம் செய்துகொள்ள மாட்டாது என்று மத்திய தொழில் அமைச்சர் திரு ஜோர்ஜ் பெர்னண்டஸ் கருத்துத் தெரிவித்துள்ளார். (இ)

---

### சிக்மகளூர் தொகுதியில்

## இந்திராவின் தெரிவில் எதிர்த்து ஆட்சேபமனு

### வீரேந்திரா பட்டீலை எம்.பி.யாக அறிவிக்குமாறும் கோரிக்கை

புதுடில்லி, டிச. 21

சிக்மகளூர் இடைத்தேர்தலில் லோக சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட திருமதி இந்திரா காந்தியின் தெரிவை எதிர்த்து வாக்காளர் ஒருவர் நேற்று உயர் நீதிமன்றத்தில் ஆட்சேப வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இடைத் தேர்தலில் பல முறை கேடுகள் இடம்பெற்றுள்ளதால் திருமதி காந்தியின் தெரிவு முறையற்றதென தீர்ப்பு வழங்குமாறு அவர் தமது மனுவில் தெரிவித்துள்ளார்.

திருமதி காந்தியின் தெரிவை ரத்துச் செய்து அவருக்கு அடுத்த படியாக அதிக வாக்குகளைப் பெற்ற ஜனதாக்கட்சி வேட்பாளர் திரு. வீரேந்திர பட்டீல் அந்த தொகுதியின் எம்.பியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். முறைப்படி அறிவிக்குமாறும் அவர் தமது மனுவில் கேட்டுள்ளார். (இ)

---

## 14 ஆயிரம் பேர் கைது!

புதுடில்லி, டிச. 21

திருமதி இந்திரா காந்தி சிறை வைக்கப்பட்டதை ஆட்சேபித்து நாடு முழுவதும் நடைபெற்ற கலவரங்களில் இதுவரை 14 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிசார் சுட்டதில் 5 பேர் பலியாகினர் என்றும் அறிவிக்கப்பட்டது.

தமிழ் நாட்டில் மட்டும் 8 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ் நாட்டில் கோயம்புத்தூரிலும், மதுரையிலுமே அதிக கலகங்கள் இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

---

## மீண்டும் இங்கிலாந்து வெற்றி

பேர்த், டிச. 21

ஆஸ்திரேலிய—இங்கிலாந்து 2-வது கிரிக்கட் டெஸ்டிலும் இங்கிலாந்துக் கோஷ்டியே வெற்றி பெற்றது 1-வது டெஸ்டில் 7 விக்கட்டுகளால் வெற்றிபெற்ற இங்கிலாந்து இம்முறை 166 ஓட்டங்களால் வெற்றி பெற்றது

எனினும் 2 இன்னிங்ஸ்களிலும் 10 விக்கட்டுகளைக் கைப்பற்றி (5-65, 5-57) ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சு வீரர் ரொட்னி கொக்ஸ் சிறந்த வீரருக்கான பரிசைத் தட்டிக் கொண்டார்.

ஸ்கோர் விபரம்: இங்கிலாந்து-309, 208 ஆஸ்திரேலியா 190, 161.

3-வது டெஸ்ட் இம்மாதம் 29-ம் திகதி மெல்போர்ணில் ஆரம்பமாகிறது

இந்திய-மேற்கிந்திய 3-வது டெஸ்டும் கான்பூரில் 29-ம் திகதி ஆரம்பமாகிறது. (இ)

---

## இன்றைய பலன்

மார்கழி மாதம் 7-ந் திகதி

வெள்ளிக்கிழமை

(22-12-78)

**மேடம்:-** எண்ணியதில் தடைகள் தோன்றும், ஏமாற்றம் தாக்கும், உடல் நலமும் சிறிது பாதிக்கப்படும், தொழில் துறையில் நஷ்டமேற்படும்.

**இடபம்:-** பந்துசனங்களின் கொண்டாட்டங்களுக்கிடமுண்டு, பெரியோர்கள் ஆதரவுக்கும் இடமுண்டு, எதிர்பாராத பொருள்வரவும் கிடைக்கும்.

**மிதுனம்:-** வியாபாரத் துறையில் துரித முன்னேற்றம், புதிய துறைகளை மனம் நாடும், பயன்தரும் பிரயாணம், நண்பர்களின் ஆதரவு இவற்றுடன் தெய்வத்தின் துணையுமுண்டு.

**கடகம்:-** உண்மைவழி நின்ற உயர்வடைவீர்கள், மேலதிகாரிகளின் நம்பிக்கை உங்கள்மீது பதியும், எதிர்பாராத அதிர்ஷ்டலாபங்களுக்கும் இடமுண்டு.

**சிங்கம்:-** கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கி நிற்பீர்கள், விடயங்கள் அனைத்தும் மூடுபனியாகவேயிருக்கும், வணிகர்களாயின் முதலீட்டை மட்டுப்படுத்திக் கொள்ளவும்.

**கன்னி:-** பிறரின் தலையீடு வேதனையைத் தரும், கருடப்பார்வை உங்களை வட்டமிடும், உஷார் நிலையில் இருப்பது விரும்பத்தக்கது.

**துலாம்:-** கன்னல்மொழி பேசி காரியத்தைச் சாதிப்பீர்கள், குடும்பத்தில் அமைதி நிலவும், வரவேற்கவேண்டிய தினம்.

**விருச்சிகம்-** எதிலும் அவசரக்கோலம் தென்படும், துரிதகதியில் செயலாற்ற முனைந்து தோல்வியை முத்தமிடுவீர்கள், தற்பெருமையைத் தவிர்த்துக் கொள்ளவும்.

**தனுசு:-** பந்தபாசம் உங்களைப் பரவசப்படுத்தும், கல்வித்துறையில் அதிக ஈடுபாடு ஏற்படும் தாய்வழியால் மகிழ்ச்சி தென்படும்.

**மகரம்:-** பொதுமக்கள் மத்தியில் மதிப்பு உயரும், தங்கள் செல்வாக்கில் பிள்ளைகளுக்கும் பெரும் பங்குண்டு. ஆதரவுக்கு இடமுண்டு, நன்நாள்.

**கும்பம்:-** சூழ்ச்சிவலை விரிப்பதற்கு எதிரிகள் முற்படுவர், மனச்சாட்சியின்படி நடந்து கொள்ளவும், வழக்கு விவகாரத்திலல் அதிகப்பணம் செலவாகும், தெய்வ நம்பிக்கை நன்று.

**மீனம்::-** பசுமையான எண்ணங்கள் நெஞ்சில் அலைமோதும், காதல் வசப்பட்டவர்களுக்கு கனிவான தினம், களஸ்திரவழியாலும் ஆவரவு உண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

---

## ஆசிய விளையாட்டு ஜப்பானுக்கு முதலிடம்

பாங்கொக், டிச. 21

பாங்கொக்கில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுக்களில் 70 தங்கப் பதக்கங்களைப்பெற்ற ஜப்பான் முதலாவது இடத்தைப்பெற்றுக்கொண்டது.

ஜப்பானுக்கு 59 வெள்ளிப் பதக்கங்களும் 49 வெண்கலப் பதக்கங்களும் கிடைத்தன.

51 தங்கப் பதக்கங்களையும் 54 வெள்ளிப்பதக்கங்களையும், 45 வெண்கலப்பதக்கங்களையும் பெற்ற சீன இரண்டாவது இடத்தைப்பெற்றது

17 தங்கப் பதக்கங்களையும் 20 வெள்ளிப்பதக்கங்களையும், 31வெண்கலப் பதக்கங்களையும் தட்டிக்கொண்ட தென் கொரியா மூன்றாவது இடத்தைப்பெற்றுக்கொண்டது

11 தங்கப் பதக்கங்கள், 11 வெள்ளிப் பதக்கங்கள் 6 வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுக்கொண்ட இந்தியாவுக்கு 6வது இடம் கிடைத்துள்ளது.

இலங்கை 2 வெண்கலப் பதக்கங்களை மட்டுமேபெற்று 18வது இடத்தைப்பெற்றுக் கொண்டது. (இ)

......

## சைவமும்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ரம் ஒவ்வொன்றும் ஒவ்வோர் நன்மையின்பொருட்டும் எடுக்கப்பட்டதாகும். கொடுமையை அழித்து அறத்தை மீண்டும் நிலைநாட்டுதலே கலியுக முடிவின்போது எடுக்கவிருக்கும் அவதாரத்தின் நோக்கமாகும்.

**தையல்காரன் போன்று......**

இறைவன் எடுக்கும் திருவவதாரம் பிறர் உடைகளைத் தைத்துக் கொடுக்கும் ஒரு தையற்காரன் தனக்கும் ஒரு உடையைத் தைத்துக்கொள்ளும் தன்மையைப் போன்றதென்று கூறலாம். இவ்வாறே உயிரினங்களுக்கு உடலைக் கொடுத்துதவும் இறைவன் தனக்கும் ஒரு உடலைப் படைத்துக்கொள்கின்றான். இறைவன் எல்லாம் வல்லவன், எங்கும் நிறைந்தவன், எல்லாம் அறிபவன்.

ஒரு பக்தன் தனது வழிபாட்டிற்கு எவ்வடிவத்தைத் தேர்ந்தெடுக்கின்றானோ அவ்வடிவத்திலேயே காட்சி கொடுப்பான். மேலும் இறைவனின் பல தோற்றங்களே இவையாகும் எத்தோற்றத்தில், எப்பெயரில் வழிபடினும் அவ்விறைவனே அவ்வாறு வணங்கப்படுகின்றான் எனலாம். கடவுளின் எந்த ஒரு வடிவமும் இன்னுமொரு வடிவத்திலும் மேலானதெனக் கருதுதல் அறியாமையேயாகும். ஒவ்வொருவரும் வழிபடும் வேற்றுமைக்கிணங்கவே இறைவனுக்கு வேறுபட்ட நாமங்கள் வழங்கப்படுகின்றன எனக் கூறலாம். எனவே சைவத்தின் அவதாரக் கொள்கை அர்த்தமுள்ளதாகவே விளங்குகின்றது என்று கூறலாம்.

(வளரும்)

---

## மீண்டும் கப்பல் சேவை

(கொழும்பு)

இலங்கை-இந்திய கப்பல் சேவை மீண்டும் இம்மாதம் 27ம் திகதி முதல் நடைபெறும். (இ)

---

## இலங்கை அவைக்காற்று கலைக் கழகம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அவைக்காற்று கலைக் கழகம் அண்மையில் திருநெல்வேலியில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. தமிழ் மத்தியில் நவீன கலைகளை வளம்படுத்துவதையும் தமிழில் நவீன கலைகளைப் பற்றிய பிரக்ஞையையும் அறிவையும் ஏற்படுத்துவதையும் இக்கழகம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

மாதம் ஒரு கலைநிகழ்ச்சியை மக்களுக்கு அளிப்பதென்றும் இதற்கென ஒரு ரசிகர் அவையை அமைப்பதென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

நீண்ட செயற்திட்டத்தின் அடிப்படையில் நடைபெறவிருக்கும் இக்கலை வளர்ச்சிப் பாதையில் முதற்கட்டத்தில் பரீட்சார்த்தரீதியிலான ஐந்து அவைக்காற்று கலைநிகழ்ச்சிகளை அளிப்பதென்றும் அதில் முதல் நிகழ்ச்சியாக அலெக்ஸி அடிலோவ் இந்திரா பார்த்தசாரதி ஆகியோரின் 'புதிய உலகம் பழைய இருவர்' 'பசி' என்ற இரு நாடகங்களையும் மேடையேற்றுவது எனவும் முடிவுசெய்யப்பட்டது.

அவைக்காற்று கலைக் கழகத்தின் தலைவராக ஏ. ஜே. கனகரத்தின ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். இணைச்செயலாளர்களாக திருமதி நிர்மலா நித்தியானந்தனும், க. பாலேந்திராவும், பொருளாளராக எஸ். கந்தசாமியும் தெரிவுசெய்யப்பட்டனர். பத்துப்பேர்கொண்ட நிர்வாகச் செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. (இ)

---

## இலவசம்

(யாழ்ப்பாணம்)

நாடெங்கும் மார்கழித் திருவெம்பாவைத் தினங்களில் பஜனை, வழிபாடு ஆகியவற்றில் தவறாமல் பங்குபற்றும் பாடசாலைப்பிள்ளைகள் தங்கள் சபைகள் மன்றங்கள் மூலம் விண்ணப்பித்தால் அவர்களுக்கு வெளியீடுகள் வாய்ப்பாடுமட்டைகள் நேரசூசித்தாள் மெற்றிக் அளவை முதலியனவற்றை ''யாழ்ப்பாணம் மில்க்வைற்'' தாபனத்தார் அன்பளிப்பாக வழங்குவதற்கு முன்வந்துள்ளார்கள்.

---

## பஸ்ஸில் தேடுதல்

(யாழ்ப்பாணம்)

பிடிவிருந்து பிறப்பிக்கப்பட்டுள்ள மாட்டுத் திருட்டு எதிரி ஒருவரைத்தேடி சுன்னாகம் பொலிசார்பஸ்களில் சோதனை நடத்தினர்.

சுன்னாகம் பொலிசார் தகவல் ஒன்றையடுத்து உரும்பராயில் இத்தேடுதலை நடத்தினர்.

எனினும் பஸ்ஸில் இருந்து பிரஸ்தாபநபர் எப்படியோ தப்பியோடிவிட்டாராம். (உ)

---

## பெருங்கதை

(கொக்குவில்)

கொக்குவில் கிழக்கு பொற்பதி விநாயகர் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் விநாயகர் பெருங்கதை ஆரம்பமாகி இருபத்தொரு தினங்கள் தொடர்ந்து மாலையில் நடைபெற்றுவருகிறது. (இ

## நாளைய கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக்கூட்டணியின் வாராந்தரக்கருத்தரங்கு நாளை மாலை தமிழர் விடுதலைக்கூட்டணிப் பணிமனையில் நடைபெறவுள்ளது. கருத்தரங்கில் இன மொழி சமத்துவம் வழங்க மறுக்கும் தருணத்தில் இணைப்புமொழி பற்றி பேசுவதில் அர்த்தமில்லை என்ற தலைப்பில் கூட்டணித் தலைவர்கள் உரையாற்றுவர். (கெ)

## வல்வெட்டித்துறையில் மின் விநியோகம் தடைப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

கடந்த 19ம் திகதி 'ஈழநாடு' இதழில் வெளிவந்த 'கைதான இருவர் தப்பிச் சென்றனர்?' என்ற தலைப்புடன் வெளிவந்த செய்தியில் "'நகரில் மின்சார விநியோகம் திடீரென தடைசெய்யப்பட்டதைத் தொடர்ந்தே' என்று குறிப்பிடப்பட்டது தொடர்பாக வல்வெட்டித்துறை நகரசபை விசேட ஆணையாளர் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த 18-ம் திகதியும் 19ம் திகதியும் வல்வெட்டித்துறை நகர் முழுவதும் மின்விநியோகத்தில் எதுவித தடைகளும் இருக்கவில்லை. எமது சபையின் அத்தியட்சகரின் அறிக்கை இதற்குச் சான்றாக உள்ளது. [இ]


வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சிவாஜி - மஞ்சுளா
மன்னவன் வந்தானடி

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
ஜெமினி - பத்மினி
அன்னைவேளாங்கண்ணி
(கலர்)


## பன்றிக்கோட்டு பிள்ளையார்

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி கோவிலில் விநாயகர் விரத எட்டாம் நாளாகிய இன்று மாலை பிரம்மஸ்ரீ நித்தியானந்த சர்மாவின் 'தாரகன் வதம்' என்னும் சங்கீத கதாப்பிரசங்கம் நடைபெறுகின்றது. (ஊ)

## யாழ். ஆச்சிரமம் நிதிசேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கிழக்கில் நிவாரண வேலையில் ஈடுபட்டுள்ள மட்டக்களப்பு கல்லடி உப்போடையிலுள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷனுக்கு நிதிசேகரித்து வழங்குவதற்கு யாழ். ஸ்ரீ ராமகிருஷ்ணசேவாச்சிரமம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

நிதி அளிக்கவிரும்புவோர், கொக்குவில், 20 செம்பியன் ஒழுங்கையிலுள்ள ஸ்ரீ இராமகிருஷ்ணசேவாச்சிரம செயலாளருடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-அ)

## 79ம் ஆண்டுக்கான பட்ஜட்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபையின் 1979ம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் இம் மாதம் 27ம் தேதி மாநகர சபை ஆணையாளர் திரு. கே. சிவஞானத்தினால் அவரது அலுவலகத்தில் சபையின் பிரதான உத்தியோகத்தர்களுக்கு அறிமுகம் செய்துவைக்கப்படவிருக்கிறது. (க-அ)

(புலோலி)

பஸ் வண்டியில் மிதிபலகையில் நின்று பிரயாணம் செய்த கரவெட்டியைச் சேர்ந்த வல்லிமுத்துராசா பருத்தித்துறைப் பொலிசாரால் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது அவருக்கு 15 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (அ)


வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சுஜாதா - கமலஹாசன் - சுமித்ரா
லலிதா

லிடோ
[யாழ். நகர்]
போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
தெய்வமகன்

மனோகரா
[யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-ஜெயலலிதா-ஸ்ரீகாந்த் சுகுமாரி நடித்த
கணவன் மனைவி

ராஜா
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - வைஜந்திமாலா
இன்று மட்டும் நடித்த
பார்த்திபன் கனவு (புதிய பிரதி)
நாளை முதல் எஸ். எஸ். ஆர். - விஜயகுமாரி
மூத்துமண்டபம்

REGAL
(Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30, 7-00 & 9-30 p m,
JACK IN THE BOX
(Color — Sex — Comedy)

'பிளட்மணி' வசூலில் ஒரு லட்சத்தைத் தாண்டி இப்பொழுது 4-வது வாரமாக வெற்றிநடை போடுகிறது!
சாந்தி
(யாழ்நகர்) போன்: 7642
தினசரி 4 காட்சிகள்
10-30, 4-30, 7-00, 9-30
இன்னும் சில தினங்கள் மட்டும் — Last Few Days
LEE VAN CLEEF... LO LIEH...
BLOOD MONEY (Scope - Color)

Rio
(Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
SON OF THE DESERT

ராணி
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ராதா சலூஜா நடித்த
இதயக்கனி (புதியபிரதி)

வெள்ளித்திரையில் ஓர் வண்ணக் காவியம்
ரசிகர்கள் எண்ணப்படி
இன்று வெள்ளி முதல்! யாழ் வின்ஸர் வெண்திரையில் சங்கமம்!
தினசரி 4 காட்சிகள்
கலைமாமணி சிவாஜி கணேசன், மாலினி பொன்சேகா, விஜயகுமார், ஸ்ரீதேவி, ஜெய்கணேஷ், மனோரமா, ஜெயசித்ரா தேங்காய் சீனிவாசன், பிரேம்ஆனந், சுந்தரராஜன்,
ஈழத்து நடிகர்கள்
விஜயேந்திரன், வி. எஸ். விஜயதீபன்
(அலாவுதீன் நாடக நடிகர்)
இன்னும் பல இலங்கை - இந்திய நடிகர்கள் நடித்திருக்கும் ஓர் பிரமாண்டமான இலங்கை - இந்திய கூட்டுத்தயாரிப்பு!
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மென்கலர்)
இந்தியாவில் 45 திரைகளில் வெற்றி முழக்கமிடும் வண்ணப்படம்.

உயர்ந்தவர்கள் உள்ளத்தினாலும் கள்ளமில்லாப் பிள்ளைகள்!
இன்று முதல் யாழ்-ஸ்ரீதரில்....
தினசரி காலை 10-30, பி. ப. 2-30, 6-30, 9-45.
கமலஹாசன்
சுஜாதா
ஸ்ரீகாந்த்
சுருளிராஜன்
தேங்காய் சீனிவாசன்
கௌரவநடிகர்கள்
ஜெய்சங்கர்
அசோகன்
பிரேம்நஸீர்
சஞ்சீவ் குமார்
மற்றும் பலர் நடித்த



உயர்ந்தவர்கள்
இறைவன் இரண்டு பொம்மைகள் செய்தான் தான் விளையாட...
உயர்ந்தவர்கள் உள்ளத்திலும்... ராமகிருஷ்ணா கிருஷ்ணா...
போன்ற இனிய பாடல்கள் நிறைந்த படம்.
இந்தியாவில் 100நாட்களுக்குமேல் ஓடிய திரைக்காவியம்

# விமானக்கடத்தல் இளைஞர்கள் சரணடைந்தனர்!

## புலிப்போர்...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. ஹேரத், 'தாங்கள் அவர்களைப் போல் நடக்க மாட்டோம் என்பதால் நீங்கள் அதிர்ஷ்டசாலிகள் என்றார்.

பல கட்டங்களில் சபாநாயகரின் கட்டளைகளையே செவிமடுக்காது மிகவும் உணர்ச்சி வசமாகப் பேசிக்கொண்டிருந்தவர் இக்கொலைகள் குற்றச் செயலாக நடைபெறவில்லை. நீங்கள் இந்த விதத்தில் தான் செயல்படப் போகிறீர்கள் என்றால் அதன் மூலம் எமது தமிழ் ஈழம் கோரிக்கையை முறியடித்துவிட முடியாது, நாம் எமது கோரிக்கையைத் தொடர்ந்து எழுப்பியே தீருவோம் என பெரும் கூச்சலுக்கு மத்தியில் மிக உரத்த தொனியில் அவர் கூறினார்.

### வாக்குவாதம் உச்சக்கட்டம்

அதன் பின்னர் அமைச்சர் திரு மத்தியூ எழுந்த போதே அரசு உறுப்பினர்கள் கரகோஷமிட்டனர்.

அவரின் பேச்சின்போது தான் அரசு-கூட்டணி உறுப்பினரிடையே வாக்குவாதம் உக்கிரமாக மூண்டு பின்னர் கூட்டணி எம். பிக்கள் வெளிநடப்புச் செய்தனர்.

அரசியல் பயங்கரவாதிகளுக்குத் தமிழர்விடுதலைக் கூட்டணியினர் அனைவருமே பாதுகாப்பு அளிக்கிறார்கள் என்று அமைச்சர் மத்தியூ குறிப்பிட்டபோதே பிரச்னை முதன்முதலாக மூண்டது.

அக்கூற்றை வாபஸ் பெறும்படியும் இல்லாவிடின் பிரேரணை ஒன்றின் மூலம் அமைச்சர் அதனை நிரூபிக்கவேண்டும் என்றும் திரு. அமிர்தலிங்கம் ஒழுங்குப்பிரச்னை ஒன்றைக் கிளப்பினார்.

அதன்மீது சபாநாயகர் தீர்ப்பளிக்கையில் அமைச்சர் பொதுவாக குறிப்பிட்டாரே தவிர உறுப்பினர் எவரையும் தனிப்பட்ட விதத்தில் குறிப்பிடவில்லை என்று கூறவும் திரு. அமிர்தலிங்கம், நானும் கூட்டணியில் ஒருவனே, என் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. எமது உரிமைகள் இங்கு சரியாகப் பாதுகாக்கப்படாவிட்டால் நாம் வெளிநடப்புச் செய்வோம்' என்றார்.

திரு எம். சிவசிதம்பரம், திரு ரி சிவசிதம்பரம், திரு. யோகேஸ்வரன் ஆகியோரும் பலத்த ஆட்சேபம் தெரிவித்தனர்.

மிகக் கடுமையான வார்த்தைகளும் சைகைகளும் பிரயோகிக்கப்பட்டன

இக் கட்டத்திலேயே கூட்டணியினர் வெளிநடப்புச் செய்ய ஆயத்தமானார்கள். 'உட்காருங்கள் ஐயா' என்று சில குரல்கள் அப்போது தமிழில் ஒலித்தன

''நான் இதைச் சொல்ல நேர்ந்ததையிட்டு கவலையடைகிறேன் சபாநாயகன் அவர்களே......'' என்று திரு அமிர்தலிங்கம் ஏதோ சொல்ல ஆரம்பித்தபோது அமைச்சர் மத்தியூ, 'நான் இச்சபையில் எவரையும்கூறவில்லை' என்றதும் திரு. அமிர்தலிங்கம் அமர்ந்தார்.

தொடர்ந்து அமைச்சர் 'பயங்கரவாதத்தைப் பயங்கரவாதத்தால் தான் நிறுத்த முடியும்' என்று கூறியபோது கூட்டணி உறுப்பினர்கள் அனைவருமே கரகோஷமிட்டனர்.

''உண்மைநிலை புரிந்துவிட்டது'' என்றார்கள் அவர்கள்.

அதன்பின்னர் அமைச்சர் தமிழர் விடுதலைக்கூட்டணி ஒரு பயங்கரவாத இயக்கம் என்றதும் மீண்டும் கூட்டணி எம். பிக்கள் கிளர்ந்தெழுந்தார்கள்.

திரு. அமிர், அமைச்சர் அதனை வாபஸ் பெறவேண்டும் என்று மீண்டும் ஒழுங்குப் பிரச்னை கிளப்பினார்.

நான் உங்களைக் கூறவில்லை என்றார் அமைச்சர்.

எங்களைக் கூட்டணியிலிருந்து பிரிக்கமுடியாது என்றார் நல்லூர் சிவா.

நல்லூர் உறுப்பினர் கூட்டணியின் தலைவர், நான் அதன் செயலதிபர். எமது இயக்கம் பயங்கரவாத இயக்கமா?

அமைச்சர் எம்மைப்பற்றிக் கூறவில்லை என்று கூறமுடியாது என்று திரு. அமிர்தலிங்கம் சொன்னபோது அமைச்சர் திரு. காமினி திசநாயக்கா குறுக்கிட்டு.

''கடந்த அரசின் காலத்தில் உங்களிடத்தில் நாம் இருந்தபோது கிளர்ச்சிக்காரர்களைநாமேதான் வழி நடத்துகிறோம் என அரசாங்கம் கூறியது, உறுப்பினர் ஒருவருக்குத் தமது கருத்தைத் தெரிவிக்க உரிமை இருக்கிறது'' என்று கூறவும் திரு. அமிர்தலிங்கம்—

மிக உரத்த தொனியுடனும் ஆத்திரத்துடனும் ''நாம் அவர்கள்மீது மிகுந்த மதிப்பு வைத்திருந்தோம், இன்று நீங்கள் இப்படிக் கூறியதையிட்டு நீங்கள் வெட்கப் படவேண்டும்''— என்று அமைச்சர் காமினியைப் பார்த்துக் கூறிவிட்டு, ''இப்படியான குற்றச்சாட்டுகளுக்கு இச்சபையில் இடமளிக்கப்படுமாயின் நாம் இங்கிருப்பதில் அர்த்தமில்லை'' என்று கண்டனம் தெரிவித்து ''நாம் வெளியேறுவோம்''— என்று கூறி திரு. அமிர்தலிங்கம் முன்னே செல்ல அவரைத் தொடர்ந்து சபையிலிருந்த கூட்டணி எம். பி.க்கள் திரு. எம். சிவசிதம்பரம், திரு. வி. தர்மலிங்கம், திரு. ரி சிவசிதம்பரம், திரு. துரைரத்தினம், திரு. யோகேஸ்வரன், திரு. ராஜலிங்கம் ஆகியோர் சபையை விட்டு வெளியேறினர்

அப்போது சபையில் பெருங்கூச்சலும் கரகோஷமும் எழுந்தன. 'புலிகள் போகின்றன' என்று பல குரல்கள் ஒலித்தன.

### காமினி சொன்னது

அவர்கள் சென்றதும் திரு. காமினி திசநாயக்கா ''காந்தியின் சீடர்கள் எனும் இவர்களைப் பார்த்துக் காந்தி வெட்கப்படுவார்'' என்றார்

''உறுப்பினர்கள் சென்றுவிட்டதால் எதிர்க்கட்சித் தலைவரின் ஒழுங்குப் பிரச்னை மீதான தீர்ப்பையும் நான் வழங்கவில்லை'' என்றார் சபாநாயகர்.

அமைச்சர் மத்தியூ பேசிக்கொண்டிருந்தசமயமே சபைக்கு வந்த அமைச்சர் காமினி திசநாயக்கா ''நான் ஓர் ஒழுங்குப் பிரச்னை கிளப்புகிறேன். கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சுக்கும் இந்த விஷயங்களுக்கும் என்ன தொடர்பென்று கேட்கவும் சபையில் பலத்த சிரிப்பொலி எழுந்தது.

அந்த அமைச்சின் மீதான விவாதத்திலேயே அமைச்சர் மத்தியூ பதிலளித்துப் பேசிக்கொண்டிருப்பதாக நினைத்திருக்கிறார் காமினி. ஒத்திவைப்புப் பிரேரணை நடைபெறுகிறதென்ற விஷயம் அவருக்குத் தெரியவில்லை

கூட்டணி உறுப்பினர்கள் வெளியேறிய பின்பும் அமைச்சர் மத்தியூ தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார்

அப்போது ஓர் உறுப்பினர் கூட்டணி எம் பி. ஒருவர் கதவினால் எட்டிப்பார்க்கிறார்'' என்றார்

''அவர்கள் இங்கிருந்து வெளிநடப்புச்செய்து எதர்க்கட்சித் தலைவரின் அறையிலிருந்து சபைநிகழ்ச்சிகளைக் கேட்கிறார்கள். இது சரியா?'' என நான் ஓர் ஒழுங்குப் பிரச்னை கிளப்புகிறேன்'' என்றார் இன்னொரு உறுப்பினர்.

அப்படிக் கேட்பதைக் கட்டுப்படுத்த முடியாதென்றார் சபாநாயகர்.

அமைச்சர் மத்தியூவைத் தொடர்ந்து பிரதமர் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தார். (அ)

---

## சரணடைந்தனர்!

புதுடில்லி, டிச. 21

**இந்திய ஏர்லைன்ஸ் ''போயிங் 347'' விமானத்தைக் கடத்திய இரு இளைஞர்களும் இன்று காலை வரணுசி விமானநிலையத்தில் பொலிஸாரிடம் சரணடைந்தனர்.**

விமானத்தில் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த 126 பயணிகளும் 6 சிப்பந்திகளும் விடுவிக்கப்பட்டனர்.

சரணடைந்த கடத்தல்காரர்களின் கோரிக்கைக்கிணங்க அவர்கள் இருவரும் சிறிய விமானம் ஒன்றில் லக்னோவுக்கு அழைத்துச்செல்லப்பட்டு பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர்,

கடத்தல்காரர்களான தோலாநாத் பாண்டேயும் தேவேந்திரநாத் பாண்டேயும் இன்று காலை வரணுசி விமான நிலையத்தில் காத்திருந்த உத்தரப்பிரதேச முதல்வர் திரு. யாதவுடன் 'வயர்லஸ்' மூலம் கதைத்தபின்னரே சரணடைந்தனர்.

பாட்னு விமானநிலையத்திலிருந்தே தாம் விமானத்தில் ஏறியதாகவும், மீண்டும் தம்மை பட்னுவில் கொண்டு சென்று இறக்குமாறும் கடத்தல்காரகள் விடுத்தகோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

''ஜனதா கட்சி அரசு ராஜினமாச்செய்ய வேண்டும்— திருமதி காந்தியை சிறை வைக்கவேண்டுமாயின் வீட்டுக்காவலில் வைக்குமாறும்— திருமதி காந்திக்கும் அவரது மகன் சஞ்சாய்காந்திக்கும் எதிராக உள்ள சகல வழக்குகளையும் வாபஸ் பெறவேண்டும் என்றும் திரு யாதவிடம் கோரிக்கை விடுத்த கடத்தல்காரர்கள், முதல்வர் இக்கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாது எனத் தங்களுக்குத் தெரியும் என்றும் கூறினார்களாம்.

இவர்களில் கோலாநாத் பாண்டே இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இளைஞர் இயக்க உறுப்பினர் என்றும் தேவேந்திரநாத்பாண்டே கடந்த தேர்தலில் சுயேச்சை உறுப்பினராகப் போட்டியிட்டுத் தோல்விகண்டவர் என்றும் குறிப்பிடப்பட்டது.

---

## 'இதயத்தை தொட்டுப்பார்த்துக் கூறுங்கள்'

### பாராளுமன்றத்தில் 'யோகேஸ்'

(கொழும்பு)

''கிருபாகரன் என்ற இளைஞர், சபை நிகழ்ச்சிகளைப் பார்வையிடவும், அவரது எம். பி. இங்கு எவ்வாறு பேசுகின்றாரெனப் பார்ப்பதற்காகவே இங்கு வந்தார், அவர் இப்போது அரசாங்க ஊழியராக இருக்கிறார். கடந்த 7 மாதங்களாக அவருக்குச் சம்பளம் கிடைக்கவில்லை. அவ்விடயம் பற்றி ஆலோசிக்கவே வந்திருந்தார். அதில் என்ன தவறு இருக்கிறது!''

யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் பாராளுமன்றத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு.யோகேஸ்வரன் மேலும் கூறியதாவது: ''துரையப்பா கொலைவழக்கில் எதிரியாக இருந்த கிருபாகரனுக்குமானிப்பாய் எம். பி. திரு. வி தர்மலிங்கம் பாஸ் கொடுத்து இங்கு கூட்டிவந்ததாக மாவத்தகம எம். பி. கூறினார்.

துரையப்பா வழக்கில் அவர் விடுதலை செய்யப்பட்டார். மாவத்தகம எம். பி. கூடக் கொலைக்குற்றம் சாட்டப்பட்டு விடுதலையானார்.

திரு. அமிர்தலிங்கம்: அவர் ஒரு குற்றவாளியா?

திரு. சிவசிதம்பரம்: சபையில் இருக்கிறார்.

திரு. யோகேஸ்வரன்: ''நிவித்திகலை எம். பி.கூடக் குற்றம் சாட்டப்பட்டு விடுதலையாகி இங்கிருக்கிறார், கிருபாகரன் இன்று ஒரு சுதந்திரமான இளைஞர். மைக்கல் பெரேராகூடக் குற்றம் சாட்டப்பட்டு விடுதலையாகி இன்று பிரதியமைச்சராக இருக்கிறார்

''ஹொறனை வங்கி ஊழியர் ஒருவர் கொள்ளையில் ஈடுபட்டுத் தண்டனைபெற்று பின் மன்னிப்புக் கேட்டு வேலை திரும்பக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் எமது பகுதிகளில் என்ன நடைபெறுகிறது? பொலிஸ், இராணுவம் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது அப்பாவிகளான நிராயுதபாணிகளான மக்கள் தாக்கப்படுகின்றனர்

''கலாச்சாரம், பண்பாடு மிக்க மக்களை இப்படியான நடவடிக்கைகளால் மண்டியிடச்செய்யலாமென்று அரசு நினைக்கிறது. அந்த முயற்சியில் அரசு தோல்வியடையும்.

',பின்வரிசை உறுப்பினர்கள் கூச்சல்போடவே இருக்கிறார்கள். அவர்களுக்கு பிரச்சினை விளங்கவில்லை. இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியுமா என்று இதயத்தில் தொட்டுப் பார்த்துக் கூறுங்கள். இல்லாவிடில் வடக்கு, கிழக்கை எங்கள் பொறுப்பில் விட்டுவிடுங்கள்.'' (க)

---

## மரக்கறி.........

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வடிகால் திட்டம் ஒன்றும் அமைக்கப்படவிருக்கிறது. இத்திட்டத்திற்கும் வீதிகள் திருத்தத்திற்குமென 19 லட்சத்து 25 ஆயிரம ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒரு லொறி, 2 டிராக்டர்கள், ஒரு ஜீப் முதலானவை வாங்குவதற்காக நாலரை லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது.

---

## தமிழர்களை......

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தமது லொறிச் சாரதியும் இராணுவத்தினரால் தாக்கபட்டதாகத் தெரிவித்துள்ளார். இதுபோல பல சாரதிகள தாக்கபபட்டதாக முறையிடப்பட்டுள்ளது

''இதன் எதிரொலியாக, லொறிகளில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு மீன் மற்றும் பொருட்களை எடுத்துச்செல்லச் சாரதிகள் இப்பொழுது மறுப்புத் தெரிவிக்கின்றனர்.

''இவை சம்பந்தமாக உடனடியாக, பலன் தரக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

''தமிழ்மக்கள் மீது பொலிஸாரும், இராணுவத்தினரும் நடத்தும் தாக்குதல்களை உன்னிப்பாகக் கவனிக்கும் பொழுது 1977 ஆகஸ்ட் கலவரம் நினைவுக்கு வருகிறது. இப்படியானதொரு கலவரம் மீண்டும் உருவாகுவதற்குத் தாபமிடப்படுகிறதோ என்று மக்கள் அஞ்சுகின்றனர். ஆகவே இவ்விஷயத்தில் உரிய நேரத்தில் சரியான நடவடிக்கையைத் தாமதமின்றி எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். இது தவறும் பட்சத்தில் அல்லது தாமதம் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் பயங்கர விளைவுகள் ஏற்படலாமென்று அஞ்சுகின்றேன்.

''கடந்த 16-ம் திகதி வசாவிளானிலும், 18ம் திகதி வல்வெட்டித்துறையிலும் பொலிசாரும் இராணுவத்தினரும் பொதுமக்களைத்தாக்கி பொருள்களைக் கொள்ளையடித்து, கடைகள் வீடுகளுக்குத் தீயும்வைத்துள்ளனர். வல்வெட்டித்துறையில் 11 கடைகளும் ஒரு வீடும் எரிந்துள்ளன. 20 பேர் காயமடைந்துள்ளனர். நால்வர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் 1977 ஆகஸ்ட் கலவரத்துக்கு முன்னரும் இப்படியான சூழ்நிலையே தோற்றுவிக்கப்பட்டது.

''இதுசம்பந்தமாக உடன் நடவடிக்கை எடுப்பதுடன் அடையாள அணிவகுப்பொன்றும் நடைபெற ஏற்பாடுசெய்யுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்'' என்று திரு அமிர்தலிங்கம் தமது கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார். (ம)

---

## பஸ்ஸுக்கு.........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரென ஏறிய இனம்தெரியாத ஒருவரே பஸ்ஸுக்குத் தீவைத்துவிட்டுச் சடுதியாக இறங்கி ஓடிவிட்டாரென்று கூறப்பட்டது.

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu Telephone: 889, Registered as a Newspaper in Sri Lanka.